முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த

# மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 03 திகதி முதல் சோபகிருது வருடம் சித்திரை மாதம் 10 திகதி வரை

(16.04.2023 ஞாயிறு முதல் 23.04.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தவதரும பலம் கொண்டநல்
   தவராஜனே ஞான தேசிகனே
   அவதார உன் பெருமைகூறி
   அறிவிப்பேன் இந்தியா தமிழகம் தன்னில்
2. தன்னிலே சோபகிருது தகர்திங்கள்
   தக்க சூலதிகதிமேல் தசதிகதிவரை
   இன்னாளில் நடக்கும் வாரநிகழ்வாக
   இயம்பிடுவேன் அகத்தியனும் வாரஆசி
3. ஆசியதும் வெப்பம் மிகுந்து
   அக்கினி வழி ஆபத்து உண்டு
   பேசிட அரசசெயல் திட்டங்கள்
   பின்னடைவு காண நேரும்
4. நேருமையில்லா அதிகாரிகளால்
   நிர்வாகச் சீர்கேடு பலதுறைகளில்
   வருமுலகில் அம்பலம் ஆகியே
   வளர்ச்சியிலா முடங்க நேரும்
5. நேருமைபடா அதிகார வர்க்கம்
   நிந்தனையாக தண்டனைகள்
   வருமுலகில் கண்டு மாறநேரும்
   வையகம் தன்னில் இந்தியா தமிழகம் நோக்கி
6. நோக்கியே உலகநாடுகள் தானும்
   நெருக்கடி தரா புதிய முதலீடுகள்
   தேக்கமின்றி வழங்கி வளர்ச்சி
   தமிழகம் இந்தியா காணக் கூடும்

7. கூடவே வழிபாடுகள் மிகுந்து
குறிப்பாக தெய்வ அனுகூலமாகி
ஈடேற்றும் சமத்துவ சமதர்ம
இலக்காக மாற்றம் காணும்
8. காணவே இந்தவித பலம்
கலசமுனி என்னோடு காக்கைமுனி
ஞானவான்கள் துணையாக மாறி
நாடெங்கிலும் இடர்கள் விலகி
9. விலகியே நல்வினை பெருகி
வேலவன் சக்திமாந்தர் வழி
கலகமில்லா கண்ணியம்படவே
கந்தா முருகா என முழங்க
10. முழங்கவே முழுமை ஞானமாக
மேலவர்களின் தருமசேவையாக
வளங்கள் கூடி இந்தியா தமிழகம்
வளர்ச்சி நிலைகள் அடையும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 03ம் நாள் 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் சித்திரை மாதம் 10ம் நாள் 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள நிகழ்வுகள் :

எல்லையில்லாது தானமும் தவமும் செய்து தருமபலமும் தவ பலமும் பெற்றிட்ட தவராசனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகை காக்க வந்துதித்த அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் சித்திரை மாதம் 03ம் நாள் 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் சித்திரை மாதம் 10ம் நாள் 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்த வார காலத்திலே நாட்டினில் சூரியனின் வெப்பம் அதிகமாகி வெப்ப சம்பந்தமான வகையிலே பல துன்பங்கள் உண்டாகுமப்பா. ஆதலினாலே அரசின் திட்டங்கள் பின்னடைவு காண நேருமப்பா.

நாட்டின் பல துறைகளில் உள்ள நேர்மையற்ற அதிகாரிகளின் செயல்பாடுகளினால் நிர்வாக சீர்கேடுகள் உண்டாகுமப்பா. இதனால் நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி பாதிப்பிற்கு உள்ளாகும் சூழ்நிலை உருவாகும் நேர்மையற்ற அதிகாரிகளின் செயல்பாடுகள் உலகில் பலரும் அறியும் வண்ணம் வெளிப்படுமப்பா நேர்மையற்ற அதிகாரிகள் தண்டனைக்கு உள்ளாகி மாற்றம் காணுமப்பா.

இந்தியா தமிழகத்திற்கு உலக நாடுகள் நெருக்கடிகள் தராமல் புதிய முதலீடுகளை தடையின்றி வழங்கி ஒத்துழைப்பு தரும் அதனால் இந்தியா தமிழகம் வளர்ச்சி அடையும்.

நாட்டினில் தெய்வ நம்பிக்கை அதிகமாகி வழிபாடுகள் பெருகிடும். ஆகையினாலே நாட்டினில் தெய்வபலம் தெய்வ அனுகூலமாகி நாட்டை முன்னேற்றும் வகையிலே சமத்துவ சமதர்மம் பெருகி நாடு வளம் பெறும்.

இப்படிப்பட்ட தெய்வீக சக்தியானது கலசமுனியாகிய அகத்திய மகரிஷி என்னோடு காகபுஜண்டர் என எல்லா ஞானிகளின் துணையாக மாறியே மக்களுக்கு ஆசிபலமாக கிடைத்து நாடெங்கிலும் உள்ள துன்பங்கள் எல்லாம் விலகி நல்வினை பெருகி முருகப்பெருமானின் ஞானசக்தி மக்களுக்குள் சார்ந்து கலகங்கள் இல்லாத சூழல் உருவாகி கண்ணியம் மிகுதியாகும்.

களங்கம் இல்லாத மனதுடன் கண்ணியமான முறையிலே மனம் உருகி கந்தா முருகா என பூசைகள் செய்து வரவர அவர்களது பூஜையின் பலன் முழுமையான ஞானமாக மாறிடும் தர்ம சக்தியாக மாறி நாட்டின் வளம் பெருகிடும் இந்தியா தமிழகம் மேன்மை அடையுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–